# கலைஞரின் கடிதங்களும் திருக்குறளும்

**த. இனிகோ இருதயராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி (தன்னாட்சி)
சென்னை

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

கடித இலக்கியம் என்றால் தமிழில் சட்டென்று நினைவுக்கு வரும் சிலரில், தமிழ் இலக்கிய உலகில் தடம் பதித்து, தனக்கென தனியிடம் பெற்ற கலைஞர் மு.கருணாநிதியும் ஒருவர். இவர் தனது கட்சியினருக்கு ஏறத்தாழ எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்களை எழுதியுள்ளார். இவரின் கடிதங்கள் பல்வேறு வகைப்பட்டன. அவற்றில் பல்வேறு செய்திகள் காணக்கிடைக்கின்றன. அவை வரலாற்றுப் பெட்டகங்களாகத் திகழ்கின்றன. தனது கடிதங்களில் கலைஞர் குறள்களையும், அவற்றின் கருத்துக்களையும், படிப்பவர்களின் உள்ளத்தில் எளிதாக பதிந்து, அவர்களின் சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

## திருக்குறள் – ஓர் அறப்பெட்டகம்

தமிழல் காணப்படும் அற இலக்கியங்களில் முதன்மைபெற்று, கருத்துப் பெட்டகமாக விளங்கி, உலகோரால் போற்றப்படும் திருக்குறள் தமிழ் மொழியின் அரிய கருவூலமாகும்.

**வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு**

என்று மகாகவி பாரதியார் திருக்குறளை புகழ்கின்றார். அத்தகைய திருக்குறளுக்கு அனைவரும் புரிந்து கொள்ளும்வகையில், எளிமையான முறையில் விளக்கம் அளித்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

மனித உளவியல் பற்றிய அணுகுமுறைகளை அறிவார்ந்தவகையில் வெளிப்படுத்தி, அற வழியில், மக்களை செலுத்தி, வாழ்வியல் நெறிகளைக் கற்பிப்பதே வள்ளுவரின் திருக்குறளின் சாராம்சம் ஆகும். இத்தகைய வள்ளுவத்தைக் கசடற கற்று, தனக்கேயுரிய வகையில் விளக்கம் அளித்து, குறளோவியம் படைத்தவர் கலைஞர் மு.கருணாநிதி.

திருக்குறளை, கலைஞர் தான் எழுதிய பல்வேறு கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவத்தின் அறத்தை இவரின் பல்வேறு கடிதங்கள் பிரதிபலிக்கின்றன. தனது கடிதங்களில் அரசியலிலும், பொது வாழ்விலும் கடைபிடிக்க வேண்டிய நெறிகளை வள்ளுவத்தின் வழி நின்று நிறுவுகிறார்.

**நிலையாமை**

கலைஞர்தனது கடிதத்தில் நிலையாமையை சுட்டிக் காட்டுகிறார். இவ்வுலகில் பிறப்பவர்கள் அனைவருமே ஒரு நாள் இறந்தே தீர வேண்டும். இது உலக நியதி. இந்நியதிக்கு அனைவரும் கட்டுப்பட்டவர்களே. அரசியலிலும் நிலையாமை காணப்படுகிறது. இன்று அரசியலில் கோலோச்சுபவர்கள் நாளையே காணாமல் போய் விடலாம். எனவே அரசியலில் யார் ஈடுபட்டாலும் மக்கள் நலனையே சிந்தித்து செயல்பட வேண்டும். மக்கள் நலனை முன்னிறுத்தி அரசியல் செய்பவர்களின் உடல் மட்டுமே மறைந்து போகும். ஆனால் அவரின் கருத்துக்களும், செயல்களும் வான் உள்ளவரை அவரின்புகழ்பரப்பிநிற்கும். இதனைத்தனது கடிதத்தில் குறள் வழி நிறுவுகின்றார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு**

என்னும் துறவறவியலில் காணப்படும் குறளைக் குறிப்பிட்டு அரசியலிலும் நிலையாமை உண்டு. எனவே அதனை உணர்ந்து செயற்கரிய செயல்களை செய்து புகழ் பெற வேண்டும் என்று வழிகாட்டு கின்றார் கலைஞர்.

**குற்றம் கடிதல்**

குற்றம் செய்யாதவர்கள் மனிதர்களாக இருக்கவியலாது. மனிதர்களாக பிறந்து விட்டாலே ஏதேனும் குற்றத்தைச் செய்யும் நிலை ஏற்பட்டு விடுகிறது. குற்றம் செய்தவர்கள் அதனை உணர்ந்து திருந்தி வாழ வேண்டும். திருந்தி வாழ்பவர்களே இவ்வுலகில் மனிதர்களாக வாழத் தகுதியானவர்கள் என்பதைக் குறள் நிறுவுகின்றது.

அரசாட்சி செய்பவர்கள் குற்றவாளிகளை கண்டிக்கும்போது கடுமை காட்டித் தண்டிக்கும்போது மென்மை காட்ட வேண்டும். அப்படிப்பட்ட ஆட்சியாளர்களின் ஆட்சியே மக்களிடம் செல்வாக்குப் பெற்றுத் திகழும். கண்டிக்கும்போது கடுமை காட்டுவது சட்டத்தின் மேல் மக்களிடம் மதிப்பு ஏற்படவும், சட்டத்தின் வழி வாழ்வை நடத்தவும் மக்களை நெறிப்படுத்துகிறது. இதனைக் கலைஞர் திருக்குறளின் வழி எடுத்துக்காட்டுகின்றார்.

**கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்**

என்னும் குறளைக் குறிப்பிட்டு, கலைஞர், ஈகை குணத்தை வளர்த்துக்கொண்டு, வறியோர்க்கும், எளியோர்க்கும் உதவி, புகழ் பெற்று வாழ வேண்டும் என்று கூறுகின்றார். தண்டிக்கும்போது மென்மை காட்டுவது குற்றவாளிகளை சட்டத்தின் படி கண்டித்து, அவர்கள் திருந்துவதற்கான வாய்ப்பை வழங்குதலாகும். எனவே ஆட்சியாளர்கள் தண்டிக்கும்போது தண்டனைகள் கடுமையாக அமையாமல் அவர்களை திருத்தும் வகையில் அமையவேண்டும் என்று கலைஞர் தனது கடிதத்தின் வழி நிறுவுகின்றார்.

**குணநலன்களும் குலமும்**

இவ்வுலகில் பிறந்த எல்லோரும் அவரவர் குலத்தின் வழியே தன்னுடைய குணத்தை பெறுகின்றனர். இங்குக் குலம் என்பது அவரவர் தலைமுறை அல்லது குடும்பம் என்றும் கொள்ளலாம். சாதிகள் என்ற பொருளில் கலைஞர் இக்குறளைக் கையாளவில்லை. ஆகவே ஒருவருடைய

பெருமையை அவர் குடும்பமே தீர்மானிக்கிறது. அவரின் சிறுமையையும் அவரின் குடும்பமே நிர்ணயிக்கிறது என்கிறார் கலைஞர். இதனை

**நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின் கண் ஐயப்படும்**

என்ற குறளைக் குறிப்பிட்டு, அதன் வழி கலைஞர் எடுத்துக்காட்டுகின்றார். ஒருவனுடைய நற்பண்புகளுக்கிடையில் அன்பற்ற தன்மை காணப்படின் அவரின் குடிப்பிறப்பைப் பற்றி ஐயப்பட நேரும் என்பது சான்றோர் வாக்கு.

நடுநிலை தவறாப் பண்பும், ஆரவாரமற்ற அடக்க உணர்வும் கொண்டவர்களையல்லாமல் மற்றவர்களை உயர்ந்த குடியில் பிறந்தவர்களாகக் கருத முடியாது என்கிறார் கலைஞர். இக்குறளின் வழி சமுதாயத்தில் சிறந்த பண்புகளைப் பெற்று, பேரும் புகழும் பெற்று விளங்கும் குடும்பத்திலிருந்து வந்த ஒருவன் தன் குடும்பப் பெருமையை சீர்குலைக்கும் வகையில், செயல்பாடுகளை அமைத்துக் கொண்டால், அவனை அக்குடும்பத்தைச் சார்ந்தவனா என்று உலகம் ஐயப்படும் என்கிறார். அதுபோன்று அரசியலிலும் எந்த கட்சியில் இருந்தாலும், நடுநிலை தவறாத பண்பைக் கொண்டு, மாற்றுக் கட்சியினரும் மதிக்கத்தக்கவகையில் கொள்கைக் குன்றாய் திகழ வேண்டும் என்கிறார் கலைஞர்.

## உழவின் சிறப்பு

இவ்வுலகம் உயிர் வாழ உணவு அடிப்படை. அவ்வுணவை அளிப்பது உழவர்கள். இவ்வுலகே அவர்களைச் சார்ந்தே இயங்குகின்றது. உழவுத் தொழில் இல்லையேல் இவ்வுலகு இல்லை என்கிறார் வள்ளுவர். கலைஞர் அவர்களும் இக்கருத்தை ஏற்று, திருக்குறளின் வழி இயம்புகின்றார்.

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை**

என்ற குறளை எடுத்துக்காட்டி, உழவுத் தொழிலே சிறந்தது. எவ்வளவுத் துன்பங்கள் ஏற்படினும் வேளாண் தொழில் செய்யும் உழவர்கள் போற்றத்தக்கவர்கள் என்கிறார் கலைஞர்.

“உண்டிக்கொடுத்தோர்உயிர்க்கொடுத்தோரே” என்ற தமிழ் அறப்பண்பாட்டை பின்பற்றி, அரசாள்பவர்கள் உழவுக்கு வந்தனம் செய்து, உழவர்களைப் போற்ற வேண்டும் என்கிறார் கலைஞர். அரசாட்சி செய்பவர்கள் வேளாண் தொழில் செம்மையுற நடைபெற சிறந்த திட்டங்களைக் கைக்கொள்ள வேண்டும். அப்போது தான் உழவுத் தொழில் சிறந்து விளங்கும் என்று சொல்லி, தனது அரசாட்சியில் அதனைச் செயல்படுத்தியும் காட்டியுள்ளார் கலைஞர்.

## வாய்மை

வாய்மை எனப்படுவது வார்த்தைகளினால் வெளிப்படுத்துவது மட்டுமன்று. அது மனத்தூய்மைக்கொண்டு, செயல்களில் நேர்மையைக் கடைப்பிடிப்பது என்பதாகும் இதனையே கலைஞர் தனது கடிதத்தில்,

**பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்**

என்ற குறளின் வழி இயம்புகின்றார். ஒரு சொல் அல்லது செயலானது இவ்வுலகிற்கு நன்மையே பயக்கும் எனில், அதனை சொல்வதுகூட சிறப்பானதே என்பது குறளின் பொருள்.

அரசியல் வாழ்வில் இருப்பவர்கள் இக்குறளையே கொள்கையாகக்கொள்ள வேண்டும் என்கிறார் கலைஞர். பதவிக்கு வருவதற்கு முன்பு மக்களை கவருவதற்காக கொடுக்கப்படும் பல்வேறு வாக்குறுதிகளும் பதவிக்கு வந்த பின்னர் நிறைவேற்றப்பட

வேண்டும். அதுவே வாக்களித்தவர்களுக்கு செய்யும் கைமாறு. ஆனால் பதவிக்கு வந்தவுடன் அவற்றை மறந்து, மனம் போன போக்கில் செயல்படுவது கொண்ட கொள்கைக்கும், மாண்பிற்கும் ஒவ்வாத செயல். எனவே அரசியலில் இருப்பவர்களுக்கு வாய்மை என்பது கொள்கை மட்டும் அல்ல அது உயிர் போன்றது என்கிறார் கலைஞர்.

### விருந்தோம்பல்

தமிழர்கள் விருந்தோம்பலுக்குப் புகழ் பெற்றவர்கள். தமிழர்களின் விருந்தோம்பல் என்பது அவர்களின் பண்பாடு என்றே சொல்லுமளவிற்கு அவர்கள் விருந்தோம்பலை உயிராகக் கருதினர். முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் என்ற நற்றிணையின் வரிகள் தமிழரின் விருந்தோம்பல் பண்பிற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனையே கலைஞர் தனது கடிதத்தில்,

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

என்ற குறளின் வழி எடுத்துக்காட்டுகின்றார்.

இல்லறத்தைப் போற்றி, பொருள் சேர்த்து, அவற்றைக்காத்து, இல்வாழ்க்கைநடத்துவது எல்லாம் வரும் விருந்தினரைப் போற்றி, அவருக்கு உதவி செய்தற்பொருட்டே என்கிறார் கலைஞர்.

விருந்தினர் மாற்றார் என்றாலும், பகைவர் என்றாலும் அவர் விருந்தினராக வரும்போது அவரைப் போற்ற வேண்டும் என்பதே தமிழர் பண்பாடு.

### இகல் (மன வேறுபாடு)

ஒருவர் தன் மனக்கருத்தோடு ஒத்துப் போகவில்லை என்பதற்காக அவரை இகழ்ந்து, அவரோடு கூடாமல் தனித்து வாழ்வது தீய குணத்தை வளர்க்கும். அக்குற்றமே இகல் என்கிறது குறள்.

**இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்**
**பண்பின்மை பாரிக்கும் நோய்**

என்ற குறளைக் கூறி, பிறரோடு மனவேறுபாடு கொண்டு வாழ்தல் தீய வாழ்க்கை என்ற குறளின் கருத்தைத் தனது கடிதத்தில் நிறுவுகின்றார் கலைஞர். தன்னுடன் ஒத்துப்போகாமல், உடன்பாடு கொள்ளாமல், கருத்து மாறுபாடுகொண்டு, ஒருவன் எதிர்த்தரப்பில் இருந்தாலும், அவன்மீது கருத்து வேறுபாடு மட்டுமே கொள்ள வேண்டும். கருத்துப் போராட்டம் மட்டுமே நடத்த வேண்டும். மாறாக அவன் மீது பகையுணர்வுகொண்டு, அவனுக்கு துன்பம் விளைவிக்கக்கூடாது என்கிறார் கலைஞர்.

### முடிவுரை

செயற்கரிய செயல்களைச் செய்பவர்களின் புகழ் உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

என்ற குறளுக்கு ஏற்ப செயற்கரிய செயல்களைப் புரிந்து, கலைஞர் இவ்வுலகில் மங்காப் புகழ் எய்தியுள்ளார். அவரின் கடிதங்களை குறள் வழி ஆய்ந்தறிய இவ்வாய்வு துணை நிற்கும்.

### துணை நின்ற நூல்கள்

1. கலைஞர் கடிதங்கள், முரசொலி இதழ்
2. கருணாநிதி, மு, கலைஞர்., குறளோவியம், பாரதி பதிப்பகம், சென்னை, 2018.
3. வரதராசனார், மு. டாக்டர்., திருக்குறள் தெளிவுரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2011.